**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No.371/2023**
**Prosecution Witness – PW.9**

| | |
|---|---|
| Name | :திரு.சுப்பிரமணியம் |
| Father's Name | : |
| Age | : |
| Calling | : |
| Village | : |
| Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 21.07.2026.

(Accused present.)

முதல் விசாரணை–

நான் 2022ம் வருடம் முதுநிலை பொறியாளராக இராணித்தோட்டம் தெழிற் கூடம் நாகர்கோயிலில் பணியாற்றினேன். கடந்த 2022ம் வருடம் குளச்சல் பணிமனையில் உள்ள பேருந்து எண்.TN 74 N 0474 மத்திய தொழிற்கூடத்திற்கு கண்ணாடி உடைந்த நிலையில் கண்ணாடி மாற்றுவதற்காக வந்தது. உரிய நபரை வைத்து கண்ணாடியை மாற்றி ஒப்படைத்தேன். அதற்கான Cost of Damage சான்றிதழை வழங்கினேன். சேதமதிப்பு ரூ.409/–. இந்த விபரங்கள் தலைமையகத்தில் தலைமைப்பிரிவில் இருக்கும், இது சம்பந்தமாக இரணியல் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

என்னை போலீசார் எந்த தேதியில் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால், நான் பணியாற்றிய இராணித்தோட்டம் மத்திய தொழிற்கூடத்தில் 2022ல் விசாரித்தார்கள். தேதி தற்பொழுது ஞாபகம் இல்லை. எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால், மதியம் 3.00 மணி. சேத சான்றிதழ் நான்

போலீசிடம் கொடுக்கவில்லை என்றால், ஆமாம். நான் சொன்னது போல் சொன்ன இடத்தில் எந்த விதமான சம்பவமும் நடக்கவில்லை என்றால், சரியல்ல. உயர் அதிகாரிகள் கேட்டதால் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், இல்லை. வாகனத்தில் ஏற்பட்ட சேதத்திற்கும் இந்த எதிரிக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றால், சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**